**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

O.S.No.117/2024 **நாள்– 02.09.2025.**

1ம் வாதி சுப்புலட்சுமி ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு வா.சா. 1 ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் K.தமிழ்செல்வி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்புலட்சுமி | தாலுகா | திருவேங்கடம் |
| க–பெ | ராகவன் | தொழில் | |
| கிராமம் | திருவேங்கடம் | வயது | 63 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பாத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

1) தபசில் 1வது அயிட்ட சொத்திற்கான 10(1) அடங்கல் கணினி நகல் **வா.சா.ஆ.1**.
2) 03.03.2016ம் தேதியிட்ட ராமர் அம்மாள் இறப்பு பதிவு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.2**.
3) தபசில் 3வது அயிட்ட சொத்திற்கான 10(1) அடங்கல் கணினி நகல் **வா.சா.ஆ.3**.
4) 07.06.1991ம் தேதியிட்ட லோகநாதன் அவர்களின் தந்தை மற்றும் சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் **வா.சா.ஆ.4**.
5) தபசில் 5வது அயிட்ட சொத்திற்கான 10(1) அடங்கல் கணினி நகல் **வா.சா.ஆ.5**.
6) தபசில் 6வது அயிட்ட சொத்திற்கான வரிவிதிப்பு ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.6**.
7) 21.02.2005ம் தேதியிட்ட தபசில் 7வது அயிட்ட சொத்திற்கான கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் **வா.சா.ஆ.7**.
8) 03.01.2022ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயருக்கு லோகநாதன் அவர்கள் 4வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து ஏற்படுத்தி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் **வா.சா.ஆ.8**.
9) 28.03.2022ம் தேதியிட்ட 2, 3 வாதிகள், லோகநாதன் மற்றும் 1ம் வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுகளுடன் அலுவலக நகல் **வா.சா.ஆ.9**.
10) அஞ்சலக ஒப்புகை அட்டைகள் 2 எண்ணம் அசல் **வா.சா.ஆ.10 வரிசை**.
11) திரும்பி வந்த அஞ்சலக உரைகள் 3 எண்ணம் அசல் **வா.சா.ஆ.11 வரிசை**.
12) 14.06.2022ம் தேதியிட்ட லோகநாதன் இறப்பு பதிவு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.12**.

13) 04.01.2024 ம் தேதியிட்ட லோகநாதன் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.13**.

14) 27.06.2023 ம் தேதியிட்ட 2, 3 வாதிகள் கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அவர்களுக்க அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் அலுவலக நகல் **வா.சா.ஆ.14**.

15) 28.06.2023 ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.15**.

16) 09.02.2024 ம் தேதியிட்ட 4 ம் பிரதிவாதிக்கு 1 ம் பிரதிவாதி 4 வது அயிட்ட தபசில் சொத்தினைப் பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் **வா.சா.ஆ.16**.

17) தபசில் 4 வது அயிட்ட சொத்திற்கு 4 ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.17**.

18) 01.03.2024 ம் தேதியிட்ட வாதிகள் 1, 4 பிரதிவாதிகளுக்கும், விருதுநகர் மாவட்ட கனிமவள உதவி இயக்குனர் அவர்களுக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுகளுடன் அலுவலக நகல் **வா.சா.ஆ.18**.

19) அஞ்சலக ஒப்புகை அட்டைகள் 2 எண்ணம் அசல் **வா.சா.ஆ.19**.

20) திரும்பி வந்த அஞ்சல் உறை அசல் **வா.சா.ஆ.20**.

**(குறுக்குவிசாரணை 1 ம் எதிர்வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 02nd day of September 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.